ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1992/73 - 2016 නොවැම්බර් මස 11 වැනි සිකුරාදා - 2016.11.11
*1992/73 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் குண்டசாலை - ஹாரகம நீர் வழங்கல் திட்டத்தின், புளூவேமுதுன சேவை நீர்த்தேக்கத்திற்கு செல்லும் பாதையை அமைப்பதற்காக காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கிறேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
“லக்திய மெதுர”,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2016, நவெம்பர் 03.
5/2/1/1250.

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில் குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 709, லுனுகெட்டியாமடித்த கிராம அலுவலர் பிரிவில், லுனுகெட்டியாமடித்த கிராமத்தில் அமைந்த அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ட. பியசேன அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 1653 ஐக் கொண்ட அதிகாரம்பெற்ற நில அளவையாளர் வரைபடத்தில் காணித்துண்டிலக்கம் 4, 5 இன் ஒரு பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ள “லுனுகெட்டியாமடித்த ஹேன” என்னும் காணியில், சுமார் 06 பேர்ச்சஸ் முழு அளவிலான கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டு :-*

காணியின் பெயர் : லுனுகெட்டியாமடித்த ஹேன ;
விஸ்தீரணம் : 06 பேர்ச்சஸ்
எல்லைகள் :
வடக்கு : புலுவேமுதுனயிலிருந்து லுனுகெட்டியாமடித்த வரை அமைந்துள்ள பாதை ;
கிழக்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி ;

தெற்கு : அரசாங்க காணி ;

மேற்கு : புலுவேமுதுனயிலிருந்து லுனுகெட்டியாமடித்த வரை அமைந்துள்ள பாதை

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:

1. திருமதி மாலனி ஆரியரத்ன,
இல. 13, பன்சலை ரோட்,
லியன்கஸ் வகுர,
பன்வில.

2. திருமதி நில்மினி மல்ருக்ஷி ஆரியரத்ன,
இல. 15, பன்சலை ரோட்,
லியன்கஸ் வகுர,
பன்வில.

11 - 1270

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.